செய்தி வெளியீடு எண்.686 நாள். 06.10.2009

# நியாய விலைக் கடைகளில் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் அதிரடி ஆய்வு. பொது மக்களிடம் நேரில் விசாரணை.

## தவறு செய்த பணியாளர்கள் தற்காலிக பணி நீக்கம். வட்ட வழங்கல் அலுவலர் மீது துறை நடவடிக்கை மேற்கொள்ள ஆணை

* * * *

இன்று 06.10.2009 தூத்துக்குடி மாவட்டத்தில் வெம்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் இயங்கும் வெம்பூர் நியாயவிலைக் கடையை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தபோது.

நியாயவிலைக் கடைகளில் அனைத்துப் பொருட்களும் முறையாக வழங்கப்படுகிறதா என்பதை கேட்டபோது குழுமியிருந்த பொது மக்கள் அனைவரும் தங்களுக்கு எவ்வித குறைபாடுகளும் இன்றி நியாயவிலைக் கடைகள் மூலம் பொருட்கள் வழங்குவதாக தெரிவித்தார்கள்.

அடுத்து, மேலக்கரந்தை என்னும் கிராமத்தில் வீடுவீடாக சென்று பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருட்கள் முறையாக வழங்கப்படுகிறதா என்பதை கேட்டறிந்தார்கள். வீடுகள் தோறும் குடும்ப அட்டைகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்களை கொண்டுவரும்படி அறிவுறுத்தி அவர்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்ட பொருட்களை பரிசோதனை செய்ததில் பொது மக்கள் திருப்தி தெரிவித்தார்கள்.

நியாயவிலைக் கடையில் இருப்பு வைக்கப்பட்டிருந்த பொருட்களையும், பொது மக்கள் குடும்ப அட்டைகளுக்கு வழங்கிய பொருட்களையும் ஒப்பிட்டு பார்த்தார்கள். சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படும் பொருட்களை காட்சிப்படுத்தவில்லை என்பதை சுட்டிக்காட்டி கண்டித்தார்கள். ‘அ’ பதிவேட்டையும், இருப்பு பதிவேட்டையும் ஆய்வு செய்த உணவு அமைச்சர் அவர்கள் ஒதுக்கீட்டு ஆணை விவரத்தினை ‘அ’ பதிவேட்டில் எழுதப்படாமல் தனி தாள்களில் எழுதப்பட்டிருந்ததையும் சுட்டிக்காட்டி கண்டனம் தெரிவித்தார்கள். பிறகு மாசாப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நியாயவிலைக் கடையிலும் ஆய்வு மேற்கொண்டார்கள்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக எட்டையபுரம் கிடங்கு, கோவில்பட்டி கிடங்கு, இலுப்பையூரணி கிடங்கு ஆகிய கிடங்குகளுக்கு சென்று கிடங்கில் உள்ள அரிசியை தரப்பரிசோதனை செய்தார்கள். லாரியில் ஏற்றப்பட்ட மூட்டைகளை இறக்கி அதனை மறுஎடை பார்த்தார்கள். கிடங்குகளிலிருந்து அனுப்பும் அரிசியின் எடை அளவு சரியாக உள்ளதா, மின்னனு தராசு சரியான முறையில் இயங்குகிறதா என்பதையும் ஆய்வு செய்தார்கள். அதற்கு பிறகு தட்டாங்குளம் நியாயவிலைக் கடையில் ஆய்வு மேற்கொண்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு எடை குறைவாக அரிசி வழங்கியதற்காக முருகன் என்ற விற்பனையாளரையும், பாண்டி என்ற அளவையாளரையும் தற்காலிக பணிநீக்கம் செய்து ஆணையிட்டார்கள். பிறகு கோவில்பட்டி கூட்டுறவு பண்டக சாலையின் கிருஷ்ணன் கோவில் தெருவில் உள்ள நியாயவிலைக் கடையில் உள்ள ‘அ’ பதிவேட்டினை

**வட்டவழங்கல் அலுவலகத்தில் பராமரித்திடும் 'அ' பதிவேட்டுடன் ஒத்திசைவு செய்தும், ரத்து செய்யப்பட்ட குடும்ப அட்டைகளை கோவில்பட்டி வட்ட வழங்கல் அலுவலகத்தில் உள்ள 'அ' பதிவேட்டிலும் முறையாக ரத்து செய்யப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்தார்கள். புதிய குடும்ப அட்டை விண்ணப்பித்து 60 நாட்கள் ஆகியும் குடும்ப அட்டை வழங்காத கோவில்பட்டி வட்ட வழங்கல் அலுவலருக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்கள்.**

**ஆங்காங்கே பொதுமக்கள் தெரிவித்த புகார்களையும், மாண்புமிகு உணவு அமைச்சர் அலுவலகத்தில் பெறப்பட்ட புகார்களையும் விசாரணை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிட்டார்கள்.**

**வீதி வீதியாக சென்று நியாயவிலைக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை தொடர்ந்து மாலை 5.00 மணிக்கு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் உணவுப் பொருள் வழங்கல் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர்களின் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. ப்பி. கீதா ஜீவன் அவர்களும் பங்கு பெற்றார்கள்.**

**கிடங்குகளில் இருந்து நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பப்படும் அரிசி தரமானதாக இருக்கவேண்டும் அவ்வாறு இல்லை எனில் அந்த அரிசியை மாற்றி வழங்க வேண்டும் என்றும் போலி குடும்ப அட்டைகளை கண்டுப்பிடித்து ரத்து செய்யப்பட்ட பின் அதனை வட்ட வழங்கல் அலுவலகத்தில் பராமரித்திடும் "அ" பதிவேட்டிலும் ரத்து செய்யப்பட்டுள்ளதா என்பதை கண்டிப்பாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.**

**சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனைத்து பொருட்களும் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதை மாவட்ட வழங்கல் அலுவலரும் மண்டல இணைப்பதிவாளர்களும் முனைப்புடன் கண்காணிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். நல்ல தரமுடைய பொருட்கள் மட்டுமே மண்டல மேலாளர்கள் நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பவேண்டும். கிடங்குகளிலிருந்து அனுப்பப்படும் பொருட்கள் தான் நியாயவிலை கடைகளில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை மண்டல மேலாளர்கள் நியாயவிலைக் கடைகளுக்கு சென்று ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.**

**இக்கூட்டத்தில் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., முதன்மை செயலாளர், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, திரு. க. ராஜாராமன், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. வீர சண்முக மணி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குனர், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர், ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.**

*********************************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9